بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *11/04/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஃஹைபர் யுத்தம் மற்றும் ஸாத்துர் ரிகாஃ போர் ஆகியவற்றை முன்னிறுத்தி மாநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

**ஃஹைபர் யுத்தத்திற்குப் பிறகு நடந்த சில நிகழ்வுகள் எடுத்துக் கூறப்படுகின்றன.** தைமா வாழ் மக்களின் சமரச நிகழ்வும் அவற்றில் ஒன்றாகும். 'தைமா' மதீனாவில் இருந்து சிரியா செல்லும் வழியில் உள்ள ஒரு புகழ்பெற்ற நகரமாகும். தைமா வாழ் மக்கள் தாமே சமரசத்திற்கான முன்மொழிவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலான பார்வைக்கு முன்வைத்தார்கள். அதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். மேலும், தைமாவின் யூதர்களுக்கு அவர்களுடைய செல்வங்கள் மற்றும் உடமைகளுடன் அவர்களது பகுதியிலேயே இருக்க அனுமதி வழங்கி விட்டார்கள்.

**இதே தருணத்தில் ஃபஜ்ர் தொழுகை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.** அதன் விவரம் பின்வருமாறு: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் ஃஹைபர் போரிலிருந்து திரும்பியபோது இரவு முழுவதும் பயணத்தில் இருந்தார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு உறக்கம் வந்தபோது ஓய்வெடுப்பதற்காக மதீனாவுக்கு அருகில் முகாமிட்டார்கள். அன்னார், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம், "இன்று இரவு நீர் நம்முடைய தொழுகையின் நேரத்தைப் பாதுகாப்பீராக" என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் விழித்துக் கொண்டிருப்பதற்காக நஃபில் தொழுது கொண்டேயிருந்தார்கள். மாநபி (ஸல்) அவர்களும் சஹாபா பெருமக்களும் உறங்கி விட்டார்கள். ஃபஜ்ர் நேரம் நெருங்கியதும், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் தமது பயண விலங்கின் மீது சாய்ந்து கொண்டபோது, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மீதும் உறக்கம் ஆதிக்கம் பெற்று விட்டது. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் விழிக்கவில்லை; சஹாபா பெருமக்களிலும் எவரும் விழிக்கவில்லை; ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் விழிக்கவில்லை. எதுவரையென்றால், அவர்கள் மீது வெயில் பட்டது. பிறகு, எல்லாருக்கும் முதலாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கண்விழித்தார்கள். மாநபி (ஸல்) அவர்கள் கவலை தோய்ந்தவர்களாக ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் வினவினார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்படுமாறு கட்டளையிட்டார்கள். சிறிது தொலைவில் சென்று ஹுஸூர் (ஸல்) அவர்கள் உளூ செய்தார்கள். மேலும், சுபுஹ் தொழுகையை ஜமாஅத்தாகத் தொழ வைத்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள், "எவர் தொழுகையை

மறந்து விடுகிறாரோ அவர் நினைவு வந்ததும் அதைத் தொழுது விட வேண்டும். ஏனென்றால், ‘என்னை நினைவு கூர்வதற்காகத் தொழுகையை நிலைநாட்டுங்கள்’ என அல்லாஹ் கூறியுள்ளான்” என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: **மதீனாவுக்குத் திரும்பிவரும்போது, மக்கள் உரத்த குரலில் தக்பீர்கள் கூறலானார்கள்.** அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள், “ உங்களுடைய குரலைத் தாழ்த்தி வையுங்கள். நீங்கள் யாரோ செவிடரையோ அல்லது முன்னால் இல்லாதவரையோ அழைக்கவில்லை” எனக் கூறினார்கள். ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதம் துவங்கிய முஸ்லிம்களின் இந்தப் பயணம் வல்ல இறைவனின் அருள்களையும், வெற்றிகளையும் தழுவியவாறு சஃபர் மாதத்தின் கடைசியிலோ அல்லது ரபீஉல் அவ்வல் மாதத்தின் துவக்கத்திலோ திரும்பி வந்தபோது நிறைவடைந்தது.

**முஸ்லிம்களுக்கு சாதகமாக ஃகைபர் வெற்றியின் பல நற்தாக்கங்கள் வெளிப்பட்டன.** அவற்றில் ஏற்பட்ட ஓர் அடிப்படை நற்தாக்கம் இதுவாகும்: அரேபியாவில் முஸ்லிம்களுக்கு எதிராக சதித்திட்டங்கள் தீட்ட நினைத்துக் கொண்டிருந்த அக்கம்பக்கத்துப் பல கோத்திரங்கள் அச்சம் அடைந்து போயின. பல கோத்திரங்கள் தாமே சமரசத்திற்கான கையை நீட்டின. சில, கட்டுப்படுவதே நன்மையென அறிந்தன.

ஃகைபர் வெற்றிக்கு இந்தவொரு பெரிய விளைவு ஏற்பட்டது: அரேபிய தீபகற்பத்தில் யூதர்களின் ஆற்றல் இல்லாமல் ஆகி விட்டது. பிறகு, அந்த வெற்றிக்கு மதீனத்து முஸ்லிம்களின் வாழ்வாதாரத்தில் மிகவும் நேர்மறையான தாக்கம் ஏற்பட்டது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உட்பட சஹாபா பெருமக்கள் பலர் (ரலியல்லாஹு அன்ஹும்) அறிவிக்கிறார்கள்: ஃகைபர் வெற்றிக்குப் பிறகு எங்களுக்கு வயிறு நிறைய உணவு கிடைத்து வந்தது.

**இதற்குப் பிறகு, ஸாத்துர் ரிகாஃ (ذات الرقاع) போர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.** இந்தப் போருக்குப் பெயர்க்காரணம் இதுவாகும்: அந்தப் பகுதியில் ஒரு மரமோ அல்லது மலையோ இருந்தது. அதன் பெயரில் இந்தப் போருக்கு இந்தப் பெயர் வந்து விட்டது. இன்னொரு காரணமாக இது கூறப்பட்டுள்ளது: இந்தப் போதில் சஹாபா பெருமக்களிடம் பயண விலங்குகள் மிகவும் குறைவாக இருந்தன. பயணத்தின் கடுமையாலும், கற்கள் நிறைந்த மண்ணில் நடந்ததனாலும் சஹாபாவின் பாதங்கள் காயமடைந்து விட்டன. அவர்கள் கிழிந்த துணிகளைக் காயங்களில் கட்டிக் கொண்டார்கள். துணியின் கட்டுகள் ரிகாஃ என்று கூறப்படுவதனால் இந்தப் போருக்கு இந்தப் பெயர் வந்து விட்டது.

**இந்தப் போரின் தேதியில் வேறுபாடு உள்ளது.** வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் இதன் தேதி ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு அல்லது ஐந்தாம் ஆண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இமாம் புகாரீ (ரஹி) அவர்கள் ஒரு வலுவான சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு இதை ஃகைபருக்குப் பிறகு ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டின் போராக எடுத்துரைத்துள்ளார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A (ரலி) அவர்களும் தமது குறிப்புகளில் இதை ஃகைபர் போருக்குப் பிறகு ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில் வைத்துள்ளார்கள்.

**இந்தப் போருக்கான காரணம்** என்னவாக இருந்தது என்றால், நஜ்த் பகுதியில் சில வழிப்பறிகளும், கொள்ளைக்காரர்களும் பயணிகளுக்குத் தொல்லை கொடுத்து வந்தனர். அவர்கள் மீது ஆதிக்கம் கொள்வது சிரமமாக இருந்தது.

இவ்வாறே இந்தப் போருக்கு இந்தவொரு காரணமும் எடுத்துக் கூறப்படுகிறது: வியாபாரி ஒருவர் மதீனாவுக்கு வந்தார். அவரிடமிருந்து மதீனத்து மக்களுக்கு ஃசஃலபா (ثعلبة) கோத்திரத்தினரும், இதர கோத்திரங்களின் மக்களும் முஸ்லிம்களுக்கு எதிராக படையெடுக்க நினைக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்ததும் அன்னார் இந்தப் போர்த்திட்டத்தை மேற்கொள்ள எண்ணினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து 400, 700 அல்லது 800 தோழர்களுடன் புறப்பட்டார்கள்.

**இந்தப் போரில் சலாத்துல் ஃஹவ்ஃப் (அச்ச நேரத் தொழுகை) நிறைவேற்றியது பற்றியும் கூறப்பட்டுள்ளது.** ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நஃஹ்ல் (نخل) பகுதியிலிருந்து ஸாத்துர் ரிகாஃவுக்குச் சென்றார்கள். அங்கு ஃக்ஃபான் (غطفان) கோத்திரத்தை நேருக்கு நேர் சந்தித்தார்கள். ஆனால், எந்த சண்டையும் நடக்கவில்லை. எனினும், எதிரெதிரே இருந்தவாறு தாக்குதலுக்கான ஆபத்து இருந்தது. இதற்கிடையில், தொழுகை நேரம் வந்ததும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அச்சத் தொழுகை தொழவைத்தார்கள். அதாவது, எத்தகைய தொழுகை என்றால், அதில் பாதி பேர் முதல் பாதி தொழுகை வரை கலந்து கொண்டார்கள்; பிறகு, பின்னால் விலகி விட்டார்கள். மேலும், மீதமிருந்த பாதி போர் வந்து விட்டார்கள். அவர்களும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் தொழுதார்கள். இப்படிப்பட்ட அச்சத்தின் நிலையில் எப்படித் தொழவேண்டும் என்று இந்தத் தொழுகையைப் பற்றி சூரா அந்நிஸாவில் கூறப்பட்டுள்ளது.

புகாரீக்கு விளக்கவுரை எழுதுபவரான அல்லமா பத்ருத்தீன் அய்னீ எழுதுகிறார்கள்: அச்சத் தொழுகை பற்றி, முதன்முறை எந்த ஆண்டு இது தொடர்பாக கட்டளை இறங்கியது என்று கருத்து வேறுபாடு உள்ளது. ஸாத்துர் ரிகாஃ போரில் முதன்முறை இந்தத் தொழுகை தொழப்பட்டது என்பது அறிஞர்கள் அனைவரின் கூற்றாகும். எனினும், இதற்கான கட்டளை எப்பொழுது இறங்கியது என்பதில் அறிஞர்களிடம் கருத்து வேறுபாடு உள்ளது. ஒருவர் இதற்கான கட்டளை ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு இறங்கியது என்றும், ஒருவர் ஹிஜ்ரீ 5 ஆம் ஆண்டு இறங்கியது என்றும், ஒருவர் ஹிஜ்ரீ 6 ஆம் ஆண்டு இறங்கியது என்றும், ஒருவர் ஹிஜ்ரீ 7 ஆம் ஆண்டு இறங்கியது என்றும் கூறியுள்ளார்கள். 15 நாள் கொண்ட இந்தப் போர்த்திட்டத்துக்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா பக்கம் திரும்பிச் செல்லப் புறப்பட்டார்கள்.

**இந்தப் போர் அற்புதங்களின் போர் என்றும் கூறப்பட்டுள்ளது.** எதிரி ஒருவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது வாள் ஏந்திய நிகழ்வு இந்தப் போரில்தான் நடைபெற்றது.

இந்தப் போரின்போதுதான் **பறவையின் ஒரு நிகழ்வு**ம் நடந்தது. அதன் விவரம் பின்வருமாறு: இந்தப் போரின்போது, சஹாபா பெருமக்களில் ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு பறவைக்குஞ்சை எடுத்து வந்தார். நபி (ஸல்)

அவர்கள் அவர்பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தப் பறவையின் தாய் அல்லது தந்தை ஆகியவற்றில் ஒன்று அந்த சஹாபிக்கு முன் தானே விழுந்து விட்டது. ஒருவகையில், தானே அந்த சஹாபிக்கு முன் தன்னை சமர்ப்பித்து விட்டது. மக்கள் இந்தக் காட்சியை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இதைப் பார்த்த மாநபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இந்தப் பறவையைக் கண்டு வியப்படைகிறீர்கள். நீங்கள் அதன் குஞ்சைப் பிடித்து வைத்துக் கொண்டீர்கள். இந்தப் பறவை தனது குஞ்சை விடுதலை செய்ய வைப்பதற்காகத் தன்னைத் தானே உங்கள் முன் சமர்ப்பிக்கிறது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அந்தப் பறவை தனது குஞ்சின் மீது கருணை காட்டுவதைவிட அதிகம் உங்கள் இறைவன் உங்கள் மீது கருணை புரிகிறான்.

இவ்வாறே இந்தப் போரின்போது, **பித்துப்பிடித்த ஒரு பிள்ளை குணமடைந்த நிகழ்வு**ம் உள்ளது. காட்டரபி பெண் ஒருத்தி பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தாள். அவள், 'இவன் என் மகன் ஆவான். இவனுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது' என்று கூறினாள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய உமிழ்நீரை அந்தப் பிள்ளையின் வாயில் இட்டார்கள். மேலும், "அல்லாஹ்வின் எதிரியே! இவனைவிட்டு விலகிவிடு. நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன்" என்று மூன்று முறை கூறினார்கள். பிறகு, "இனி ஒருபோதும் இந்தப் பிள்ளைக்கு இந்த வேதனை ஏற்படாது. இவனை எடுத்துச் செல்" என்று கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இந்தப் போரின்போது, உர்வா பின் ஸைது ஹாரிஃஃசீ (عروہ بن زید حارثی) (ரலி) அவர்கள் நபிபெருமானார் (ஸல்) அவர்களிடம் மூன்று முட்டைகளைக் கொண்டு வந்தார்கள். நபிபெருமானார் (ஸல்) அவர்கள், "ஜாபிரே! இந்த முட்டைகளை எடுத்துக் கொள்வீராக. இவற்றை சமைப்பீராக" என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அந்த முட்டைகளை சமைத்து விட்டு, ரொட்டியைத் தேடினான். ஆனால், கிடைக்கவில்லை. இதனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அன்னாரின் தோழர்களும் ரொட்டி இல்லாமலேயே அந்த முட்டைகளை உண்ணத் துவங்கினார்கள். எதுவரை என்றால், **அவர்கள் வயிறு நிறைய சாப்பிட்டு விட்டார்கள். ஆனால், கிண்ணத்தில் அந்த முட்டைகள் அப்படியே இருந்தன.** பிறகு, சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) பலர் அதிலிருந்து உண்டார்கள். பிறகு, நாங்கள் முன்னோக்கிப் பயணமாகி விட்டோம்.

இந்தப் போரின்போதே, **ஓர் ஒட்டகம் மாநபி (ஸல்) அவர்களிடம்** வேகமாக வந்து, உறுமத் துவங்கி விட்டது. நபிநாதர் (ஸல்) அவர்கள், "இந்த ஒட்டகம் என்ன சொன்னது என்று உங்களுக்குத் தெரியுமா? இது **தன் எஜமானனைப் பற்றி முறையிடுகிறது.** இதன் எஜமானன் பல ஆண்டுகளாக இதனிடம் வேலை வாங்குகிறான். இப்பொழுது அவன் இதை அறுக்கப் பார்க்கிறான்" என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதன் எஜமானனிடமிருந்து அந்த ஒட்டகத்தை விலைக்கு வாங்கி காட்டில் மேய விட்டு விட்டார்கள்.

**இந்தப் போரிலேயே ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் ஒட்டகம் தொலைந்துபோயிருந்தது.** ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

இருள் நிறைந்த ஓர் இரவில் எனது ஒட்டகம் தொலைந்து போய் விட்டது. நான் அதைத் தேடியவாறு ஹுஸூர் (ஸல்) அவர்களைக் கடந்து சென்றேன். நபி பெருமானார் (ஸல்) அவர்கள் வினவியபோது, 'எனது ஒட்டகம் தொலைந்து போய் விட்டது' என்று பணிவுடன் கூறினேன். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள், "உமது ஒட்டகம் இன்ன இடத்தில் இருக்கிறது. சென்று அதைப் பிடித்துக் கொள்வீராக" எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அந்த இடத்துக்குச் சென்றேன். ஆனால், அங்கு எனக்கு ஒட்டகம் கிடைக்கவில்லை. நான் திரும்பி வந்து நின்றேன். அப்பொழுது ஹுஸூர் (ஸல்) அவர்கள் மீண்டும் அங்கேயே செல்லுமாறு வழிகாட்டல் வழங்கினார்கள். நான் மீண்டும் அங்கு சென்றேன். ஆனால், எனக்கு ஒட்டகம் கிடைக்கவில்லை. இதனால் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பரிவு காட்டியவாறு, என்னுடன் அங்கு சென்றார்கள். எதுவரை என்றால், நாங்கள் ஒட்டகம் வரை சென்றடைந்து விட்டோம். பிறகு, நபி (ஸல்) அவர்கள் எனக்கு ஒட்டகத்தைப் பிடித்துக் கொடுத்து விட்டார்கள்.

சுருக்கமாக, இந்தப் போரில் பல அற்புதங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, **இந்தப் போரிலேயே, ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களது ஓர் ஒட்டகம் சோம்பல் அடைந்து போயிருந்தது.** கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் சிறிது தண்ணீர் எடுத்து அதில் ஊதினார்கள். மேலும், அந்த ஒட்டகத்தின் இடுப்பு, தலை மற்றும் முதுகின் மீது அந்தத் தண்ணீரைத் தெளித்து விட்டார்கள். பிறகு, "ஹுஸூர் (ஸல்) அவர்கள் தடியால் அந்த ஒட்டகத்தை சிறிது அடித்து ஓட்டினார்கள். அதனால் அந்த ஒட்டகம் வேமாகி விட்டது.

இவ்வாறே இந்தப் போரின்போது, பாத்திரத்தில் தண்ணீர் அதிகரித்து, அற்புதமான முறையில் பரக்கத் ஏற்பட்ட நிகழ்வும் கிடைக்கிறது.

**கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களின் இதே போன்ற அற்புதங்கள் தொடர்பாக ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

லி(க்)கா, அதாவது, இறை சந்திப்பு எனும் இந்தத் தரத்தில் சிலவேளை மனிதன் மூலமாக எவ்வாறான விஷயங்கள் வெளிப்படுகின்றவென்றால், அவை மனித ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டவையாகத் தென்படுகின்றன. மேலும் இறை ஆற்றலின் பண்பைத் தமக்குள் கொண்டிருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, நம் தலைவரும், எஜமானரும், இறைத்தூதர்களின் தலைவரும், நபிமார்களின் முத்திரையும் ஆன மாநபி (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்தில் ஒரு உள்ளங்கை அளவு கூழாங்கற்களைக் காஃபிர்கள் மீது எறிந்தார்கள். அந்த உள்ளங்கை அளவு கற்களை எந்தவொரு துஆவின் மூலமாகவும் அல்லாமல், சுயம் தமது ஆன்மிக ஆற்றலால் செலுத்தினார்கள். ஆனால், அந்த உள்ளங்கை அளவு கற்கள் இறை ஆற்றலைக் காட்டின.

எதிரியின் படைமீது எந்த அளவு வழக்கத்திற்கு அப்பாற்றப்பட்டதாக அதற்கான தாக்கம் வெளிப்பட்டது என்றால், அவர்களில் தம் கண்களில் அதன் தாக்கம் சென்றடையாத எவரும் இருக்கவில்லை. அவர்கள் அனைவரும் குருடர்களைப் போன்று ஆகி விட்டனர். எத்தகைய பீதியும், கவலையும் அவர்களிடம் உருவாகி விட்டது என்றால், அவர்கள் நிலை குலைந்தவர்களைப் போன்று ஓடத் துவங்கி

விட்டனர். இந்த அற்புதத்தின் பக்கமே மேன்மை பொருந்திய அல்லாஹ் இந்த வசனத்தில் சுட்டிக் காட்டியுள்ளான்:

وَمَا رَمَيْتَ إِذْ رَمَيْتَ وَلَٰكِنَّ اللّٰهَ رَمٰى

அதாவது, நீர் அந்த உள்ளங்கை அளவு கற்களை எறிந்தபோது, அவற்றை நீர் எறியவில்லை; மாறாக, இறைவன் எறிந்தான். அதாவது, திரை மறைவில் இறையாற்றல் செயலாற்றி சென்று விட்டது. இது மனித ஆற்றலின் பணியாக இருக்கவில்லை.

இவ்வாறே நபி பெருமானார் (ஸல்) அவர்களின் இரண்டாவது அற்புதம் நிலவு பிளந்தது ஆகும். அது இதே இறையாற்றலால் வெளிப்பட்டது. அத்துடன் எந்த துஆவும் இணைந்திருக்கவில்லை. ஏனென்றால், அது இறையாற்றலால் நிறைந்திருந்த விரலின் அசைவால் மட்டுமே நிகழ்ந்து விட்டது. மேலும், இதே போன்ற இன்னும் பல அற்புதங்கள் இருக்கின்றன. அவற்றை சுய ஆற்றலின் அடிப்படையில் மட்டும் மாநபி (ஸல்) அவர்கள் செய்து காட்டினார்கள். அவற்றுடன் எந்த துஆவும் இருக்கவில்லை.

பலமுறை ஒரு குவளையில் மட்டும் இருந்த குறைந்த தண்ணீரில் தம் விரல்களை நுழைத்து எந்த அளவு அதிகமாக்கி விட்டார்கள் என்றால், முழுப் படையும், ஒட்டகங்களும், குதிரைகளும் அந்தத் தண்ணீரை அருந்தின. பிறகும், அந்தத் தண்ணீர் தனது கொள்ளளவில் அப்படியே இருந்தது. பலமுறை 2,3 ரொட்டிகளின் மீது கை வைத்ததன் காரணமாக, பசித்திருந்த, தாகித்திருந்த ஆயிரக்கணக்கானவர்களை அவற்றின் மூலம் வயிறாரச் செய்து விட்டார்கள். வயிறு நிறையச் செய்து விட்டார்கள்.

சிலவேளை குறைவாக இருந்த பாலுக்குத் தம் நாவினால் பரக்கத் வழங்கி அதைக் கொண்டு ஒரு கூட்டத்தின் வயிறை நிரம்பச் செய்து விட்டார்கள். சிலவேளை, கசப்பான கிணற்றில், அதாவது, உப்பு நிறைந்த கிணற்றுத் தண்ணீரில் தமது நாவின் உமிழ் நீரை இட்டு அதை மிகவும் இனிப்பானதாக ஆக்கி விட்டார்கள். சிலவேளை கடுமையாக காயமுற்றவர்கள் மீது தமது கையை வைத்து அவர்களை நலமாக்கி விட்டார்கள். சிலவேளை போரின் ஏதோ பேரதிர்ச்சியினால் வெளியே வந்திருந்த கண் விழிகளைத் தமது கையின் பரக்கத்தால் மீண்டும் சரி செய்து விட்டார்கள். இவ்வாறே இன்னும் பல செயல்களை தமது சுய ஆற்றிலின் மூலமாக செய்தார்கள். அவற்றுடன் மறைந்திருந்த ஓர் இறை ஆற்றல் இணைந்திருந்தது.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّآلِ مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)